# March 4, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தமிழக அரசின் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ், முதியோர் ஓய்வூதியம், மாற்றுத்திறனாளிகள், கைம்பெண்கள், வயது முதிர்ந்த திருநங்கையர் உதவித் தொகை பெற்று வரும் 37.79 லட்சம் பயனாளிகளுக்கு மார்ச் மாதத்துக்கான உதவித் தொகையுடன் சேர்த்து ரூ.2,000 சிறப்பு நிதி வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

(i) அது மட்டுமன்றி, மீனவர் குடும்பங்களுக்கு ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலத்துக்கான மீன்பிடித் தடைக் கால உதவித் தொகையாக குடும்பத்துக்கு ரூ.8,000 வீதம் மொத்தம் 1,62,900 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

(ii) நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 14,870 தேயிலை விவசாயிகள் பயன் பெறும் வகையில், 15 கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகள் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட பசுந்தேயிலைக்கு கிலோ ரூ.2 ஆதார விலை என ரூ.8.53 கோடி வழங்கப்படுகிறது.

2. மேற்காசியாவில் போர் தீவிரமடைந்துவரும் சூழலில், அந்தப் பிராந்தியத்தில் வாழும் ஒரு கோடி இந்தியர்களின் பாதுகாப்புக்கு இந்தியா உயர் முன்னுரிமை அளிப்பதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்தது.

(i) போர் காரணமாக எரிசக்தி விநியோகத்தில் பெரிய அளவில் இடையூறு ஏற்பட்டால், அது இந்தியப் பொருளாதாரத்தில் கடும் விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் வெளியுறவு அமைச்சகம் கவலை தெரிவித்துள்ளது.

(ii) இந்தப் போரை விரைவில் முடிவுக்குக் கொண்டுவர பேச்சு வார்த்தை மற்றும் ராஜீய வழிமுறைகளை முன்னெடுக்கவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

(iii) அணு ஆயுதம் தயாரிக்கத் தேவையான யுரேனியத்தை செறிவூட்டி வருவதாகக் குற்றஞ்சாட்டி, ஈரான் மீது அமெரிக்க-இஸ்ரேல் கூட்டுப் படைகள் பெரிய அளவிலான வான் வழித் தாக்குதலை நடத்தின.

(iv) இந்தத் தாக்குதலில் ஈரானின் தலைமை மதகுரு அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்ட நிலையில், இஸ்ரேல் மற்றும் பல்வேறு வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவத் தளங்களைக் குறிவைத்து, ஈரான் பதிலடி தாக்குதலைத் தொடுத்தது.

(v) மாறி மாறி தாக்குதல் நடத்துவதால், போர் தீவிரமடைந்துள்ளது. இதன் காரணமாக, மேற்காசிய பிராந்தியத்தில் வாழும் ஒரு கோடி இந்தியர்களின் பாதுகாப்பு குறித்து அச்சம் எழுந்துள்ளது. இந்தப் பிராந்தியத்தில் கிட்டத்தட்ட வான்வெளி முழுவதும் மூடப்பட்டுள்ளதால் விமானப் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

(vi) எண்ணெய் போக்குவரத்தில் முக்கிய வழித்தடங்களில் ஒன்றான ஹோர்முஸ் நீரிணையை மூடுவதாகவும், அந்த வழியாகச் செல்லும் சரக்கு கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவோம் என்றும் ஈரான் எச்சரித்த நிலையில், இந்தியாவின்

கருத்துகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

- உலக அளவில் 20 சதவீத எண்ணெய்-எரிவாயு விநியோகம் ஹோர்முஸ் நீரிணை வழியாகவே நடைபெறுகிறது. இந்தியாவைப் பொருத்தவரை கிட்டத்தட்ட 50 சதவீத எண்ணெய் இறக்குமதி இந்த நீரிணை வாயிலாகவே மேற்கொள்ளப்படுகிறது.
- முன்னதாக, மேற்காசியாவில் போர் மூண்டபோது, அனைத்துத் தரப்பினரும் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்து, பதற்றத்தைத் தணிக்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியிருந்தது.

3. தமிழகத்தில் 14 மாவட்டங்களில் காகங்கள் இடையே மட்டுமே பறவைக் காய்ச்சல் பரவியிருந்தாலும் பொது மக்கள் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று சுகாதாரத் துறை வலியுறுத்தியுள்ளது.

(i) சென்னை அடையாறில் இறந்த காகங்களை மத்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் ஆய்வு செய்ததில், 'ஹெச்5 என்1' எனப்படும் பறவைக் காய்ச்சல் பாதிப்பு இருந்தது அண்மையில் கண்டறியப்பட்டது. இதையடுத்து, கண்காணிப்பை தீவிரப்படுத்துமாறு தமிழக தலைமைச் செயலருக்கு மத்திய அரசு அறிவுறுத்தியிருந்தது.

(ii) அதனடிப்படையில் மாநில சுகாதாரத் துறை பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பறவைக் காய்ச்சலுக்குள்ளான கோழிகள், பிற பறவையினங்களிடமிருந்து மனிதர்களுக்கு தொற்று பரவ வாய்ப்புள்ளது. அதன் கழிவுகளில் இருந்து மனிதர்களுக்கும் எளிதில் பாதிப்பு பரவும். மேலும், பாதிக்கப்பட்ட பறவையிடமிருந்தோ, மனிதரிடமிருந்தோ மற்றவர்களுக்கு, ‘வெஸ்ட் நைல் வைரஸ்' பாதிப்பை கொசுக்கள் கடத்தும் என்பதால், நோய்ப் பரவல் வாய்ப்பு அதிகம் உள்ளது.

(iii) காய்ச்சல், தலைவலி, தசைப்பிடிப்பு, இருமல், மூச்சு திணறல் போன்றவை ஏற்பட்டால் உடனடியாக மருத்துவர்களை நாடுமாறு பொது சுகாதாரத் துறை தெரிவித்திருந்தது.

4. அமெரிக்கா, இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில், ஈரானின் நடான்ஸ் அணுசக்தி மையத்தின் சில பகுதிகள் சேதமடைந்துள்ளதாக ஐ.நா.வின் சர்வதேச அணுசக்தி கண்காணிப்பு அமைப்பான 'ஐஏஇஏ' உறுதிப்படுத்தியது.

(i) சர்வதேச அணுசக்தி முகமை (ஐஏஇஏ) இதுதொடர்பாக வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'மத்திய ஈரானில் அமைந்துள்ள நடான்ஸ் அணுசக்தி மையத்தில், அணு உலை அமைந்துள்ள நிலத்தடிப் பகுதிக்குச் செல்லும் நுழைவு வாயில் கட்டடங்கள் அமெரிக்கா-இஸ்ரேல் தாக்குதலில் சேதமடைந்துள்ளன.

(ii) எனினும், இத்தாக்குதலால் அணு உலையின் மிக முக்கியமான உட்பகுதிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. அணுக்கதிர்வீச்சு கசியும் அபாயம் ஏதும் இல்லை என்பது ஆய்வில் உறுதிசெய்யப்பட்டுள்ளது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(iii) முன்னதாக, நடான்ஸ் அணுசக்தி மையத்தாக்குதல் குறித்த ஈரான் குற்றச்

சாட்டை ஐஏஇஏ மறுத்திருந்தது.

5. முதல்முறையாக உலகக் கோப்பை வென்ற இந்திய மகளிர் கிரிக்கெட் அணியானது, விளையாட்டுத் துறையில் மதிப்பு மிக்கதாக இருக்கும் லாரியஸ் விருதுக்காக 2026- ஆம் ஆண்டுக்கான சிறந்த அணி பிரிவில் பரிந்துரைக் கப்பட்டுள்ளது.

6. ஐசிசி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் பேட்டர்கள் பிரிவில் இந்தியா வின் ஸ்மிருதி மந்தனா முதலிடத்துக்கு முன்னேறினார்.

7. ரூ.2,901 கோடி மதிப்பில் 6 அதிநவீன இலகுரக ஹெலிகாப்டர்களை கொள்முதல் செய்ய ஹிந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் (ஹெச்ஏஎல்) நிறுவனத்துடன் மத்திய பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம் மேற்கொண்டது.

(i) இதில், எம்கே-3 இலகுரக ஹெலிகாப்டர்கள் இந்திய கடலோர காவல் படையின் பயன்பாட்டுக்கு கொள்முதல் செய்யப்படுகின்றன.இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப் பில் கூறியிருப்பதாவது:

- இந்த எம்கே-3 இரட்டை என்ஜின் இலகுரக ஹெலிகாப்டர்கள் கொள்முதல் செய்யப்பட்டு, பயன்பாட்டுக்கு கொண்டு வருவதன் மூலம், இந்திய கடலோரக் காவல் படையின் திறன் குறிப்பிடத்தக்க அளவில் மேம்படும்.
- கடலோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மட்டுமன்றி, கடலில் நிற்கும் கப்பல்களுக்குத் தேவையான உதவிகளையும் இந்த ஹெலிகாப்டர்கள் மூலம் கடலோரக் காவல் படை வழங்க முடியும். செயற்கைத் தீவுகள், மீனவர்கள் மற்றும் கடல்சார் சுற்றுச்சூழலையும் இதன்மூலம் பாதுகாக்க முடியும். ரூ. 2,901 கோடியில் 6 ஹெலிகாப்டர்களை கொள்முதல் செய்ய ஹெச்ஏஎல் நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ii) ரூ. 2,182 கோடியில் ஏவுகணைகள்:

- மேலும், இந்திய கடற் படையின் போர்க் கப்பல்களில் பயன்படுத்துவதற்காக ரூ.2,182 கோடி மதிப்பில் தரையிலிருந்து வான் இலக்குகளை தாக்கி அழிக்கும் ஏவுகணைகள் மற்றும் ஏவுகணை ஏவும் அமைப்புகளைக் கொள்முதல் செய்ய ரஷியாவின் ஜேஎஸ்சி ரோசோபோரோன் எக்ஸ்போர்ட் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையொப்பமாகியுள்ளது.
- இந்த ஏவுகணைகள் கொள்முதல், வான்வெளி அச்சுறுத்தல்களை திறம்பட எதிர்கொள்ளும் வகையில் போர்க் கப்பல்களின் திறனை மேம்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டது.

8. இந்தியாவிடம் 10 கோடி பீப்பாய் கச்சா எண்ணெய் கையிருப்பில் உள்ளதாக கெப்லர் வர்த்தகப் பகுப்பாய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

(i) கச்சா எண்ணெய்யில் இருந்து பெட்ரோல், டீசல் பிரித்தெடுக்கப்படும் நிலையில், தனது கச்சா எண்ணெய் தேவையில் சுமார் 88 சதவீதத்தை இறக்குமதி மூலம் இந்தியா பூர்த்தி செய்கிறது. அதில் 50 சதவீ தத்துக்கும் அதிகமான கச்சா எண்ணெய் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

(ii) பாரசீக வளைகுடாவை அரபிக் கடலுடன் இணைக்கும் ஹோர்முஸ் நீரிணை வழியாக, இந்தக் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது. ஈரான்-அமெரிக்கா- இஸ்ரேல் போர் காரணமாக இந்த நீரிணை வழியாக சரக்குக் கப்பல் போக்குவரத்து முடங்கியுள்ளது.

(iii) இதனால் இந்தியாவுக்கு பாதிப்பு ஏற்படுமா என்பது குறித்து பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸல்ஸை தலைமையகமாக கொண்டு செயல்படும் கெப்லர் வர்த்தக பகுப்பாய்வு நிறுவனத்தின் தலைமை ஆராய்ச்சி ராய்ச்சி பகுப்பாய்வாளர் சுமித் ரிட்டோலியா தெரிவித்துள்ளதாவது:

- கெப்லர் நிறுவனத்திடம் உள்ள விரிவான தரவுகளின்படி, இந்தியாவிடம் தற்போது 10 கோடி பீப்பாய் கச்சா எண்ணெய் கையிருப்பு உள்ளது.
- ஹோர்முஸ் நீரிணை வழியாக கச்சா எண்ணெய் கிடைப்பதில் இந்தியாவுக்கு தடை ஏற்பட்டால், 10 கோடி பீப்பாய் கச்சா எண்ணெய்யை 40 முதல் 45 நாள்கள் வரை இந்தியா பயன்படுத்தலாம்.

(iv) மாற்று வழிகள் என்ன?

- மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் விநியோகம் சில காலத்துக்கு முழுமையாகத் தடை பட்டால், அதன் உடனடி விளை வாக கச்சா எண்ணெய் விலை உய ரும். அவ்வாறு விலை உயர்ந்தால், கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்ய இந்தியாவுக்கு அதிக செல வாகும்.
- ஹோர்முஸ் நீரிணை வழித்தடம் முற்றிலும் மூடப்பட்டு மத்திய கிழக்கு நாடுகளிடம் இருந்து கச்சா எண்ணெய் விநியோகம் குறைந்ததால், அதை ஈடுகட்ட மேற்கு ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, அமெரிக்காவில் இருந்து கச்சா எண்ணெய்யை இந்தியா இறக்குமதி செய்யலாம் என்றார்.

9. இந்தியாவிடம் போதிய அளவு கச்சா எண்ணெய் கையிருப்பில் உள்ளதாக மத்திய பெட்ரோலிய துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

(i) கச்சா எண்ணெய்யில் இருந்து பெட்ரோல், டீசல் பிரித்தெடுக்கப்படும் நிலையில், தனது கச்சா எண்ணெய் தேவையில் சுமார் 88 சதவீதத்தை இறக்குமதி மூலம் இந்தியா பூர்த்தி செய்கிறது. அதில் 50 சதவீ தத்துக்கும் அதிகமான கச்சா எண்ணெய் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து ஹோர்முஸ் நீரிணை வழியாக இறக்குமதி செய்யப்படுகின்றன.

(ii) ஈரான்-அமெரிக்கா-இஸ்ரேல் போர் காரணமாக இந்த நீரிணை வழியாக சரக்குக் கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

(iii) 24 மணி நேர கட்டுப்பாட்டு அறை:

- நாட்டில் பெட்ரோலியம் பொருள்களின் விநியோகம் மற்றும் இருப்பு நிலவரத்தை தொடர்ந்து கண்காணிக்க வாரத்தில் அனைத்து நாள்களும் 24 மணி நேரம் செயல்படக் கூடிய கட்டுப்பாட்டு அறையை மத்திய பெட்ரோலிய அமைச்சகம் நிறுவியுள்ளது. தற்போதைய நிலையில் இந்தியாவிடம் சௌகரியமான அளவு கச்சா எண்ணெய் கையிருப்பு உள்ளது.

- தொடர் கண்காணிப்பின் அடிப்படையில், தேவைப்பட்டால் சூழலை மேலும் தணிக்க படிப்படியான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ளும் என்றார்.

(iv) 6 முதல் 8 வாரங்களுக்கு :-

இதுகுறித்து மத்திய பெட்ரோலிய அமைச்சக அதிகாரி ஒருவர் கூறிய தாவது:

- உள்நாட்டில் பெட்ரோல், டீசல் மற்றும் பிற எரிபொருள்களின் தேவைகளை 6 முதல் 8 வாரங் களுக்கு பூர்த்தி செய்யும் வகையில், இந்தியாவிடம் போதிய அளவு கச்சா எண்ணெய் மற்றும் எரிபொருள் கையிருப்பு உள்ளது என்றார்.

10. சென்னை,ஓமந்தூரார் அரசு பல்நோக்கு மருத்துவமனையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு மருத்துவத் துறையை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

(i) விளையாட்டு வீரர்களுக்கு ஏற்படும் காயங்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான சிறப்பு உயர்திறன் மையமாக அது செயல்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ii) ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் ரூ. 9 கோடியில் விளையாட்டு மருத்துவம் மற்றும் நுண்துளை மூட்டு அறுவை சிகிச்சை மையம் (ஆர்த்ரோஸ்கோபி) அமைக்கப்படும் தமிழக அரசு அறிவிப்பு வெளியிட்டது.

(iii) ஓமந்தூரார் பல்நோக்கு மருத்துவமனையில் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு ரோபோடிக் அறுவை சிகிச்சை மையம் ரூ.34.60 கோடியில் தொடங்கப்பட்டது.

11. ரஞ்சி கோப்பையில் ஜம்மு & காஷ்மீர் (ஜே&கே) கிரிக்கெட் அணியின் வரலாற்று சிறப்புமிக்க முதல் வெற்றி.

(i) ஒரு வரலாற்று மைல்கல்

- வரலாற்றில் முதல் முறையாக, ஜம்மு & காஷ்மீர் அணி 8 முறை சாம்பியனான கர்நாடகாவை தோற்கடித்து ரஞ்சி கோப்பையை வென்றது.
- போட்டி அக்டோபர் 15, 2025 அன்று தொடங்கியது, இதில் நாடு தழுவிய அளவில் 38 அணிகள் பங்கேற்றன.
- இறுதிப் போட்டி பிப்ரவரி 24 முதல் 28, 2026 வரை கர்நாடகாவின் ஹுப்ளியில் நடந்தது. முதல் இன்னிங்ஸ் முன்னிலையின் அடிப்படையில் ஜம்மு & காஷ்மீர் வெற்றியைப் பெற்றது.

(ii) வெற்றிக்கான நீண்ட பயணம் (1960–2026)

- ஜம்மு & காஷ்மீர் அணி ஜனவரி 15, 1960 அன்று கிழக்கு பஞ்சாபிற்கு எதிராக ஜலந்தரில் தனது முதல் ரஞ்சிப் போட்டியை விளையாடியது, இதன் விளைவாக தோல்வியடைந்தது.
- 1982 ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் வெற்றியை பதிவு செய்ய அந்த அணிக்கு 22 ஆண்டுகள் ஆனது.
- 66 ஆண்டுகளில், அந்த அணி மூன்று முறை மட்டுமே காலிறுதிக்கு

முன்னேறியது (2013-14, 2019-20, மற்றும் 2024-25).

- இந்த வெற்றி சீசனில், ஜம்மு காஷ்மீர் டெல்லி, ஹைதராபாத், ராஜஸ்தான் மற்றும் மத்தியப் பிரதேசம் போன்ற சக்திவாய்ந்த அணிகளை தோற்கடித்து, அரையிறுதியில் வங்காளத்தை வீழ்த்தியது.

(iii) எலைட் போட்டியை முறியடித்தது

- இறுதிப் போட்டியில், ஜம்மு காஷ்மீர் அணி, கே.எல்.ராகுல், மயங்க் அகர்வால், தேவ்தத் படிக்கல், கருண் நாயர் மற்றும் பிரசித் கிருஷ்ணா போன்ற இந்திய தேசிய வீரர்களைக் கொண்ட வலிமையான கர்நாடக அணியை எதிர்கொண்டது.

(iv) முக்கிய வீரர்கள் மற்றும் புள்ளிவிவரங்கள்

- அகிப் நபி: 10 போட்டிகளில் 12.57 என்ற குறிப்பிடத்தக்க சராசரியுடன் 60 விக்கெட்டுகளை வீழ்த்தியதற்காக தொடரின் சிறந்த வீரராக தேர்வு செய்யப்பட்டார்.
- பேட்டிங் தலைவர்கள்: அப்துல் சமத் மொத்தம் 748 ரன்கள் எடுத்தார், அதே நேரத்தில் 41 வயதான கேப்டன் பர்வேஸ் ரசூல் 637 ரன்களை வழங்கினார்.
- இறுதிப் போட்டியின் ஹீரோக்கள்: இறுதிப் போட்டியில் செஞ்சுரியன்கள் சுபம் பண்டிர் (121), கம்ரான் இக்பால் (160 நாட் அவுட்), மற்றும் சாஹில் லோத்ரா (101 நாட் அவுட்) ஆகியோர் அடங்குவர்.
- பந்துவீச்சு ஆதரவு: சுனில் குமார் 9 போட்டிகளில் 31 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

(v) சமூக-அரசியல் மற்றும் புவியியல் சூழல்

- 40 ஆண்டுகால அமைதியின்மை மற்றும் பயங்கரவாதம், புவியியல் தடைகள் (மலைகள் மற்றும் பள்ளத்தாக்குகள்) மற்றும் அடிப்படை விளையாட்டு உள்கட்டமைப்பு இல்லாத போதிலும் இந்த வெற்றி அடையப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(vi) பரந்த தாக்கம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

- இளைஞர் உத்வேகம்: இந்த வெற்றி ஜம்மு & காஷ்மீரில் விளையாட்டுகளில் ஆர்வத்தை அதிகரிக்கும், இளைஞர்களை பயங்கரவாதத்தின் பாதையிலிருந்து விலக்கும்.
- மும்பை மற்றும் டெல்லி போன்ற பாரம்பரிய ஜாம்பவான்கள் குஜராத், விதர்பா, சவுராஷ்டிரா மற்றும் இப்போது ஜம்மு & காஷ்மீரைப் போன்ற வளர்ந்து வரும் அணிகளால் சவால் செய்யப்படும் இந்திய கிரிக்கெட்டில் ஒரு ஆரோக்கியமான போக்கு.
- இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க உத்வேகத்தைப் பயன்படுத்திக் கொள்ள சிறந்த வசதிகளையும் பயிற்சியையும் வழங்குமாறு மாநில அரசு மற்றும் பிசிசிஐயை வலியுறுத்த வேண்டும்.